*Sri Lankan Journal of Arabic and Islamic Studies*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language*
*Volume Vol 6 Issue.1. January - March 2023*
*E-ISSN: 2550 – 3014, P. 38 - 51*
*DOI: https://doi-ds.org/doilink/03.2023-55683162/6.1-4*

# மோதல் தீர்வுச் செயன்முறை: ஓர் இஸ்லாமிய நோக்கு

## (CONFLICT RESOLUTION PROCESS: AN ISLAMIC OVERVIEW)

S.M. HAKEEMA BEEVI[1], M.T.F. BUSHRA[1], M.M.A. ABDULLAH[1,*],
AND S.M.M. MAZAHIR[1]

[1] DEPARTMENT OF ISLAMIC STUDIES, SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

Corresponding email: abdullahmma@seu.ac.lk

***Abstract:*** *Conflicts between individuals and groups at various levels are inevitable. However, it is essential that conflicts are resolved through an efficient process. In this regard, based on the five conflict resolution steps recommended by the American Management Association, the study aimed at analysing the Islamic guidelines on conflict resolution through its basic sources and historical evidence. The major finding reveals that Islam presents an avid guidance process for successfully dealing with contradictions and obtaining proper solutions. Therefore, accurate studies of the application of these guidelines in resolving the practical conflicts that appear in various dimensions in the modern era would greatly assist in the evaluation of the finding of the study.*

***Keywords:*** *Conflict, Resolution, Management, Islam, Process*

**ஆய்வுச்சுருக்கம்**
*பல்வேறு மட்டங்களிலும் தனிநபர், குழுக்களுக்கிடையிலும் முரண்பாடுகள் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகும். எனினும் வினைத்திறனான செயன்முறையினூடாக முரண்பாடுகள் தீர்க்கப்படுவது மிக அவசியமானது. அந்தவகையில் அமெரிக்க முகாமைத்துவ நிறுவனம் பரிந்துரைத்துள்ள முரண்பாட்டுத் தீர்வுக்கான ஐந்து படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களை அதன் மூல ஆவணங்கள் மற்றும் வரலாற்று சான்றுகள் ஊடான பகுப்பாய்வுக்குட்படுத்துவதை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது. கோட்பாடு மற்றும் வரலாற்று நடைமுறை சார்ந்து நோக்குமிடத்து முரண்பாடுகளை வெற்றிகரமாகக் கையாண்டு உரிய தீர்வைப் பெறுவதற்கான சீரிய வழிகாட்டல் செயன்முறையை இஸ்லாம் முன்வைக்கிறது என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். எனவே, நவீன உலகில் நடைமுறைசார்ந்து பல்வேறு பரிணாமங்களில் தோன்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் இவ்வழிகாட்டல்களின் பிரயோகம் தொடர்பான துல்லியமான ஆய்வுகள் இவ்வாய்வு முடிவு தொடர்பான மதிப்பீட்டுக்கு பெரிதும் உதவும்.*

***கருச்சொற்கள்:*** *முரண்பாடு, தீர்வு, முகாமைத்துவம், இஸ்லாம், செயன்முறை*

Submitted: 2 February, 2023 Accepted: 15 March, 2023 Published: 31 March, 2023

**அறிமுகம்**

முரண்பாடு எனும் சொல் மனிதர்களிடம் இருந்து ஆரம்பித்து சர்வதேச யுத்தங்கள் வரையிலான விரோதம், பகைமை போன்றவற்றை உள்ளடக்கிய பரந்தளவான மனித நடவடிக்கைகளை குறித்து நிற்கின்றது. முரண்பாட்டினை பாரம்பரிய பொருளில் நோக்கும் போது சண்டை, போராட்டம், கொள்கை மோதல் எனலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்களிடையே விழுமியங்கள், அதிகாரம், பதவி மற்றும் வளப்பற்றாக்குறைக்கான சச்சரவுகள் போன்றவற்றால் நிகழும் இணக்கப்பாடின்மை முரண்பாடுகள் எனக் கூற முடியும். முரண்பாடு என்பது குடும்பம் முதல் சமூக வாழ்வு, பொருளாதாரம், அரசியல், கல்வி, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் என பல்வேறு அம்சங்களிலும் ஏற்படக்கூடியது. இவ்வாறாக முரண்பாடுகள் தோன்றும் போதே அவற்றை தடுத்துவிடாது, அவற்றை வளரச் செய்து தீவிர நிலையை அடையச் செய்வது யுத்தங்களும் பிளவுகளும் ஏற்பட வழிவகுக்கும் (Rizvi, 2018).

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை வழங்கும் மார்க்கமாகும். இது அமைதி, சமாதானம், சாந்தம் எனும் கருத்துக்களைக் குறிக்கும் *ஸலாம்* எனும் சொல்லிலிருந்து உருவானது. அது இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சியான, அமைதியான வாழ்வை புலப்படுத்துவதாக அமைகிறது. அது மக்களை தனிப்பட்ட விவகாரங்களில் இருந்து சர்வதேச தொடர்பாடல்கள் வரையும் வழிப்படுத்துகின்றது. எனவே, இங்கு தவிர்க்க முடியாத அம்சமான மோதல் மற்றும் அதன் விளைவாக சமாதானக் கருத்துக்கள் என்பவற்றையும் அது முன்வைத்துள்ளது. இஸ்லாமிய வழிகாட்டல்கள் மோதல் தீர்விற்கான கோட்பாடுகளை தனது அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆனிலும், ஹதீஸிலும்; பூரணமாக வெளிப்படுத்தியுள்ளன. நபியவர்கள் தன்னுடைய வாழ்வில் இந்த ஒழுங்குகளை தேவையான சந்தர்ப்பங்களில் பிரயோகித்தும் காட்டியிருந்தார்கள். இது முரண்பாடுகளைத் தீர்ப்பதில் இஸ்லாத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது (Babagana & Tukur, 2020).

இவ்வாறு தோன்றும் முரண்பாடுகளைக் கையாளுதல் என்பது ஓர் முக்கிய அம்சமாகும். உருவாகியுள்ள முரண்பாடுகளைக் கையாண்டு அவற்றிற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தனித்துவமான ஆற்றலாகும். இதன் காரணமாகவே முரண்பாட்டுத் தீர்வில் மத்தியஸ்தம் என்பதும் முக்கியம் பெறுகின்றது (Rizvi, 2018). அந்தவகையில் மோதல் தீர்வு என்பது இஸ்லாத்தில் மிக நுணுக்கமான முறையில் கையாளப்பட்டுள்ளதை பல்வேறு வரலாற்று நிகழ்வுகளில் காண முடியும்.

"ஒரு மனிதர் நபியவர்களிடத்தில் வந்து தனக்கு உபதேசம் செய்யுமாறு கேட்டார். அதற்கு நபியவர்கள் 'கோபம் கொள்ளாதீர்கள்" எனக் கூறினார்கள். மீண்டும் அவர் உபதேசம் செய்யுமாறு பலமுறை கேட்டார். நபியவர்கள் 'கோபம் கொள்ளாதீர்கள்" என்றே பதில் கூறினார்கள்" (புகாரி, 6116). எனினும் இங்கு நபியவர்களால் வழங்கப்பட்ட அறிவுறையானது, ப்ரெய்டின் (Sigmund Freud) கோட்பாடான 'மோதலின் போது உணர்ச்சிவசப்படுதல் சிறந்த சிகிச்சைமுறை நுட்பமாகும்"; என்பதற்கு முரணானதாகும். இருப்பினும் லீ, மோதல் முகாமைத்துவ நிபுணர்களான பிஸர், ஸபிரோ போன்ற ஆய்வாளர்கள் அவரது கருத்துடன் உடன்படுகின்றனர் (Yassien & Yassien, 2015).

அதேபோன்று 'சமாதானமே மிக மேலானது. பொதுவாக மனங்கள் உலோபித்தனத்திற்கு உட்பட்டுவிடுகின்றன" (4:127) என்ற அல்குர்ஆனிய வசனம் மோதல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துகின்றமையை அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில் முரண்பாடொன்று ஏற்படுவதற்கு முன்னரும் ஏற்பட்டதன் பின்னரும் எவ்வாறான வழிகளில் அவற்றைக் கையாள வேண்டும் என்பது தொடர்பாக இஸ்லாம் அழகிய முறையில் வழிகாட்டியுள்ளது. அவற்றிற்கான அடிப்படைகளை *அல்குர்ஆன்* மற்றும் *ஸுன்னா* என்பவற்றுடன் பல்வேறு முஸ்லிம் ஆட்சியாளர்களது வரலாற்றுச் சான்றுகளும்

எடுத்துக்காட்டுகின்றன. எனவே, இவ்வாய்வானது மோதல் முகாமை மற்றும் மோதல் தீர்விற்கான இஸ்லாமிய வழிகாட்டுதல்களைக் கோட்பாட்டு ரீதியாக வரையறை செய்ய முனைகிறது.

### ஆய்வு முறையியல்

பண்பு சார் ஆய்வு முறையிலமைந்த இவ்வாய்வுக்காக இரண்டாம் நிலை மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மோதல் தீர்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான *அல்குர்ஆன், அஸ்ஸுன்னா* மற்றும் இஸ்லாமிய வரலாற்றுச் சான்றுகளில் காணப்படும் தரவுகளுடன் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளத் தரவுகள் போன்றன பெறப்பட்டு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை *(Content analysis)* மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


### ஆய்வு வரையறை

அமெரிக்க முகாமைத்துவ நிறுவனம் *(American Management Association (AMA)) (2019)* பரிந்துரைத்துள்ள முரண்பாட்டுத் தீர்வுக்கான பின்வரும் 5 படிநிலைகள் *(Five steps to conflict resolution)* இவ்வாய்வுக்கான வரையறையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

- i. முரண்பாட்டுக்கான மூலத்தை வரையறை செய்தல் *(Define the source of the conflict)*
- ii. குறித்த நிகழ்வுக்கு அப்பால் நோக்குதல் *(Look beyond the incident)*
- iii. தீர்வுகளை வேண்டுதல் *(Request solutions)*
- iv. முரண்பாட்டுத் தரப்பினர் இருவரும் ஆதரிக்கும் வகையிலான தீர்வுகளை இனங்காணல் *(Identify solutions both disputants can support)*
- v. இரு தரப்பினருக்கிடையிலான உடன்பாடு *(Agreement)*

### ஆய்வின் கோட்பாட்டுக் கட்டமைப்பு

இவ்வாய்வின் கோட்பாட்டுக் கட்டமைப்பை பின்வருமாறு குறிப்பிட முடியும்:



↓

**இரு தரப்பினரும் ஆதரிக்கும் தீர்வுகளை இனங்காணல்** *(அஹ்மத், 23489), (திர்மிதி, 2509)*

↓

**இரு தரப்பினர்களுக்கிடையிலான உடன்பாடு** *(அல்குர்ஆன், 20:44), (புகாரி, 6263, 4418), (அபூ தாவூத், 5220), (முஸ்லிம், 54)*

***உரு 1**: மோதல் முகாமைத்துவச் செயன்முறை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்கள்*

### பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

*இப்பகுதி மோதல் தோற்றம், மோதல் முகாமைத்துவம் மற்றும் மோதல் தீர்வு போன்றவை தொடர்பில் பரிசீலித்து, அவை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களையும் அவற்றின் பிரயோகத்தையும் விபரிக்க முனைகிறது.*

#### *i. **முரண்பாட்டுக்கான மூலத்தை வரையறை செய்தல் (Define the source of the conflict)***

*முரண்பாட்டுத் தீர்வின் முதல் செயன்முறைக்கு அமைவாக, மோதல் தீர்வொன்றை முன்வைக்கும் முன் அது எவ்வாறு ஏற்பட்டது அதனுடைய தற்போதைய நிலை என்ன என்பதைத் தீர்க்கமாக ஆராயக் கோருகிறது.*

*முரண்பாட்டு மூலம் என்பது மோதல் உருவான காரணங்களையும் அதன் உள்ளார்ந்த உண்மைத் தன்மையையும் ஆராய்வதாக அமைந்துள்ளது. அதாவது முரண்பாடு எப்போது தோன்றியது என்பதை விரிவாக கால சூழலுடன் நோக்குகின்றது. மேலும், மோதல் குழுக்கள் தங்களுக்கிடையில் எப்போது முரண்பாடு தோன்றியுள்ளது என்பதை உணர்கின்றன. குறித்த அந்த மோதல் உணர்விற்கும் தற்போதைய நிலைக்கும் இணக்கம் உள்ளதா? எப்படி இந்த மோதல் ஆரம்பத்தில் உருவாகியுள்ளது? போன்ற வினாக்களுக்கும் விடையளிப்பதாக முரண்பாட்டு மூலத்தை வரையறை செய்யும் படிமுறை காணப்படுகின்றது.*

*ஒருவர், முரண்பாட்டுத் தீர்வினை வழங்குவதில் முகாமையாளராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ செயற்படும் சந்தர்ப்பத்தில் அவர் மோதல் தரப்பினர்களுக்கு அவர்களது நியாயத்தை குறிப்பிடுவதற்கான அல்லது பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டியுள்ளது. இது மோதல் நிலையைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுடன் சர்ச்சைக்குரியவர்களிடம் கேள்விகள் கேட்கப்படும் போது அதனை அங்கீகரித்து, தகவல்களைத் தொடர்ந்து வழங்க ஊக்குவிக்கின்றது (AMA, 2019).*

*இச்செயன்முறைக்கு அமைவாக, இஸ்லாத்தின் மோதல் தீர்வுச் செயன்முறையை ஒப்பிடும் போது இஸ்லாம் ஒரு முரண்பாட்டின் அடிப்படைத் தன்மைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வினை வழங்குவதில் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. அந்தவகையில் இஸ்லாத்தில் மோதல் முரண்பாட்டு மூலங்களை கண்டறிவதில் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் வழிகாட்டல்கள் முதன்மையானவையாகும்.*

எடுத்துக்காட்டாக "விசுவாசிகளே! தீயவன் உங்களிடம் ஏதேனும் செய்தியை கொண்டு வந்தால், அறியாமையால், ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கிழைத்து விடாதிருப்பதற்காக (அதன் உண்மையை அறிவதற்காக அதனைத் தீர்க்க விசாரணை செய்து), தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்" (49:6) எனும் வசனம் இதனை நன்கு உணர்த்துகிறது.

அதாவது இவ்வசனம் ஒரு பிரச்சினையைப் பற்றி குறிப்பிடுவதுடன் நின்றுவிடாமல் தெளிவாக அதன் பின்னணியை ஆராயக் கோருகிறது. ஏனெனில் தீர்க்கமானதும் தெளிவானதுமற்ற செயன்முறை எதிர்த்தரப்பினர் மீது பாதிப்பை ஏற்படுத்தவல்லதாகும் என்பதே இதற்கான பிரதான காரணியாகும்.

அதேபோல் மோதல் தீர்வின் அடிப்படைத் தன்மைகளை ஆராயாமல் இருப்பதை இஸ்லாம் கடுமையாக எச்சரித்துள்ளது. இதற்கு "நீதிபதிகள் (தீர்ப்பு வழங்குவோர்) மூன்று பிரிவினராவர். அவற்றுள் ஒரு பிரிவு சுவனத்தைப் பெறுவர். மற்ற இரு பிரிவுகள் நரகில் இருப்பர். உண்மையை (நன்கு) அறிந்து அதற்கமைய தீர்ப்பளித்தவர் சுவனத்தில் நுழைவர். உண்மையை நன்கு அறிந்திருந்தும் அநீதமாகத் தீர்ப்பளித்தவரும் (தீர விசாரிக்காமல்) தெளிவின்றித் தீர்ப்பளித்தவரும் நரகில் நுழைவர்" (அபூ தாவூத், 3573) எனும் நபிமொழி சிறந்த சான்றாகும்.

மேலும் *அல்குர்ஆன், ஸுன்னா* என்பன முரண்பாட்டினை அதன் தன்மையுடன் பல இடங்களில் அடையாளப்படுத்திக் காட்டியுள்ளன.

உதாரணமாக யூஸுப் (அலை) அவர்களின் கனவு தொடர்பான "என் அருமை மகனே! உமது கனவை உன் சகோதரர்களிடம் சொல்லிக்காட்ட வேண்டாம். (அவ்வாறு செய்தால்) அவர்கள், உனக்கு(த் தீங்கிழைக்க) சதி செய்வார்கள்;. ஏனெனில் (அவ்வாறு சதி செய்யத் தூண்டும்) *ஷைத்தான்,* நிச்சயமாக மனிதனுக்குப் பகிரங்க விரோதியாக இருக்கின்றான்" (12:5) எனும் வசனத்தில் ஒரு தரப்பினர் மீதான இன்னொரு தரப்பினரின் மோதல் மனப்பான்மை எடுத்துக்காட்டப்படுகிறது.

அத்துடன் இச்சம்பவத்தில் தீர்க்கமாக ஆராய்ந்து ஒரு மோதல் இடம்பெறுவதற்கான தன்மை வெளிக்காட்டப்படுவதுடன் அதற்கான காரணமாக பின்வரும் விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது.

"யூஸுபும் அவருடைய சகோதரரும் நம் தந்தைக்கு நம்மை விட அதிகம் பிரியம் உள்ளவர்களாக இருக்கின்றனர்" (*அல்குர்ஆன்,* 12:8).

அந்தவகையில் இச்சம்பவத்தில் மோதலின் ஆரம்ப கட்டம் முதல் தற்போதைய நிலையை நோக்குமிடத்து ஆரம்பத்தில் *இஃக்திலாப்* (கருத்து வேறுபாடு) எனும் நிலையிலிருந்து மோதல் தன்மை பின்னர் *ஷிகாக்* (பிளவு) எனும் பிரிவினை நிலையை அடைந்துள்ளதாகவும் காட்டுகிறது.

இதனையே 'அவரை அழைத்துச் சென்று ஆழமான கிணற்றில் தள்ளிவிட ஒன்று சேர்ந்து முடிவு செய்த போது ...." (12:15) எனும் வசனம் தெளிவுபடுத்துகிறது.

இவ்வாறாக உள ரீதியாக ஏற்பட்ட பிளவும் பிரிவினையும் இறுதியில் கொலை, வன்முறை எனும் நிலையை அடைந்துள்ளது என்பதனை *அல்குர்ஆன்* எடுத்துக்காட்டுகிறது.

### ii. குறித்த நிகழ்வுக்கு அப்பால் நோக்குதல் (Look beyond the incident)

மோதல் தீர்வின் அடுத்த கட்டம், மோதல் நிகழ்ந்த சூழலை விரிவாக நோக்குவதாகும். அதாவது இது முரண்பாடு ஒன்று தோற்றம் பெற்ற பின்னர் அதன் தீவிரத்தன்மையை ஆராய்வதாகும். இங்கு முரண்பாடு தோற்றம் பெற்று பல மாதங்களாக காணப்பட்ட போதிலும் அதனுடைய வடு உக்கிரமடைந்து வெளிப்படையாக மோதல் தரப்பினர்களிடையே தாக்குதல் உருவாகும் நிலையை நோக்குகின்றது. இங்கு மீண்டும் மோதலுக்கான காரணங்கள் அதன் உண்மைத் தன்மையுடன் நோக்க வேண்டியுள்ளது. இன்னும் மோதல் தரப்பினர்களிடையே என்ன நடந்தது, எப்போது முதலில்

*பிரச்சினை உருவானது என்று நினைக்கிறீர்கள் போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதே இப்படிமுறையின் பிரதான இலக்காகும்.*

மோதல் தீர்வொன்றில் இச்செயன்முறையைச் செய்வதற்கு *American Management Association (AMA)* முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்தக் கோருகின்றது. இவ்வகையில் இஸ்லாத்தினுடைய முரண்பாட்டுத் தீர்வில் முகாமைத்துவத் திறன்கள் என்பது கட்டாயமானதாகவே நோக்கப்படுகின்றது. மோதல் தொடர்பான தீர்வினை மேற்கொள்வதற்கு மத்தியஸ்தம் ஒன்றை உருவாக்கி அதனூடாகவே இச்செயன்முறையை *AMA* செயற்படுத்தக் கோருகின்றது. இத்தன்மையை இஸ்லாத்துடன் ஒப்பிடும் போது, இஸ்லாம் முரண்பாட்டு முகாமைத்துவச் செயன்முறையை முற்றுமுழுதாக அதன் திறன்களுடன் நோக்குகின்றது. அதாவது, இஸ்லாத்தில் மத்தியஸ்தம் எனும் செயற்பாடானது மோதல் தீர்வில் முதன்மையானதாகும் *(Cader, 2017).*

*"நபி (ஸல்) அவர்கள் தமது அறைக்கு அருகில் மக்கள் சச்சரவு செய்து கொள்வதனைச் செவிமடுத்து வெளியில் வந்து பின்வருமாறு கூறினார்கள்:- "நிச்சயமாக நானும் ஒரு மனிதன் தான். முரண்பட்டுக் கொண்டவர்கள் என்னிடத்தில் வரலாம். சிலர் சிலரை விட நன்றாகப் பேசுவார்கள். நன்றாகப் பேசுபவர்தான் உண்மை சொல்கிறார் என்று நான் எண்ணி அவருக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூறிவிடுவேன். ஒரு முஸ்லிமின் உரிமை என்று தீர்ப்புக் கூறிவிட்டால் (அது அவரது பேச்சின் காரணமாக, என்னையறியாது நேர்மையற்றதாக இருப்பின்) நிச்சயமாக அது அந்நபரைப் பொருத்தமட்டில் நரகின் ஒரு பகுதிதான். விரும்பினால் அதை எடுத்துக் கொள்ளட்டும் அல்லது விட்டுவிடட்டும்" (புகாரி, 7185) எனும் நபிமொழி பிணக்கு ஒன்றின் போது அதனைத் தீர்க்கமாக விசாரணை செய்து இரு தரப்பினருக்கும் நீதமான முறையில் முடிவு பெறப்பட வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது.*

*அத்துடன் "நபி (ஸல்) அவர்கள் பனூ குறைளாவினர் வசிக்கும் இடத்துக்கு சஹாபாக்களை அனுப்பி வைத்த சமயம் அஸர் தொழுகையினை பனூ குறைளாவிலே தொழவேண்டும் எனக் கூறியிருந்தார்கள். வழியிலேயே அஸரு(த் தொழுகை) நேரத்தை அவர்கள் அடைந்தனர். அப்போது சிலர், பனூ குறைளாக் குலத்தினரை அடையும் வரை நாம் அஸர் தொழ வேண்டியதில்லை" என்று கூறினர். வேறு சிலர், (தொழுகை நேரம் தவறிப் போனாலும் தொழவேண்டாம் என்ற) அந்த அர்த்தத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறவில்லை. (வேகமாக அங்கு போய்ச் சேருங்கள் என்ற கருத்தில் தான் இந்த வார்த்தையைக் கூறினார்கள்.) எனவே, நாம் தொழுவோம் என்று கூறினர். நபி (ஸல்) அவர்களிடம் இரண்டு சாரார் குறித்தும் தெரிவிக்கப்பட்டபோது அவர்களில் எவரையும் அவர்கள் குறை கூறவில்லை" (புகாரி, 4119) எனும் நிகழ்விலும் இரு தரப்பினர் தொடர்பான நியாயங்களும் நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டுள்ளமையும் அவற்றை நபி (ஸல்) அவர்கள் கவனத்தில் கொண்டுள்ளமையும் புலனாகிறது.*

மேலும் மோதல் தீர்வு எனும் விடயத்தில் இஸ்லாம் பின்வரும் அம்சங்களை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ளது என *Babagana & Tukur (2020)* ஆகியோர் தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

1. ***தஸ்கியா (உளத்தூய்மை):*** *தஸ்கியா என்பது ஓர் இலக்காகவும் மோதல் தடுப்பு நடவடிக்கையாகவும் காணப்படுகிறது. இது மோதலில் ஈடுபடக்கூடிய இரு தரப்பினரும் பேண வேண்டிய அம்சமாகும். இஸ்லாத்தின் போதனைகள் மக்களின் ஆன்மீக மற்றும் உளவியல் அம்சங்களில் நுண்ணறிவினையும் வலியுறுத்துகின்றது (அல்குர்ஆன், 91:9). சில அறிஞர்களது கருத்துப்படி உறுதியான ஈமான் மற்றும் மனத்தூய்மையின் விளைவாக நீதியான மற்றும் ஒழுக்கமான முஸ்லிமாக மனிதன் உருவாகின்றான்.*
2. ***அல்இஸ்லாஹ் (சீர்திருத்தம், இணக்கம்):*** *அல்குர்ஆன் ஸுல்ஹ் எனும் பதத்தினை பல இடங்களில் பிரயோகித்துள்ளது. அதன்படி இது முரண்பாடு ஒன்று ஏற்படும் போது*

மேற்கொள்ளப்படும் உயர்ந்த தார்மீக நடவடிக்கையாகும் *(அல்குர்ஆன், 4:128)*. இது தீர்வு மற்றும் நல்லிணக்கம் என பொருள் கொள்ளப்படலாம். மேலும் *அல்இஸ்லாஹ்* என்பது சரியான, பொருத்தமான ஓர் முடிவைக் கொண்டு சமரசம் செய்து தீர்வை கொடுத்தலைக் குறிக்கும்.

3. ***அல்தஹ்கீம் (மத்தியஸ்தம்)***: *தஹ்கீம்* என்பது பூமியில் தொடர்ந்தும் நிகழும் சர்ச்சைகளைத் தீர்க்கப் பயன்படும் ஒரு கருவியாகும். இம்முறைமை மோதல்களுக்கு முற்றுப்புள்ளிவைக்க பழங்குடியினரால் பயன்படுத்தப்பட்ட பொறிமுறையாகும். அல்குர்ஆனில் 4:35 வசனமானது திருமணத்தின் பின் தம்பதிகளிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க சமரசம் பயன்படுத்தப்படலாம் என்கிறது. இங்கு நடுவராக இருப்பவர் நீதி மற்றும் நற்குணமுடையவராக இருப்பதோடு வழக்காறுகள் தொடர்பாகவும் ஆழமான அறிவு கொண்டவராக இருத்தல் போன்ற தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அத்துடன் முரண்பாட்டுத் தீர்வுச் செயன்முறையில் குறித்த நிகழ்வுக்கு அப்பால் சென்று போதிய ஆதாரங்களைத் திரட்ட முனையும் போது *அல்குர்ஆன் 42:38* குறிப்பிடும் *ஷூரா* எனும் குழுக் கலந்துரையாடல் முறையைப் பின்பற்ற முடியும். அக்குழுவில் அங்கம் வகிக்கும் நபர்கள் பின்வரும் திறன்களைக் கொண்டிருப்பது அவசியமானதாகும் என *அல்குர்ஆன், ஸுன்னா* வலியுறுத்துகின்றன (Cader, 2017).

### 1. அறிவு

அல்குர்ஆனில் "...உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும், கல்வியறிவு கொடுக்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்" (58:11) மற்றும் "தான் நாடியவருக்கு அவன் ஞானத்தைக் கொடுக்கின்றான்;. (இத்தகு) ஞானம் எவருக்குக் கொடுக்கப்படுகிறதோ, அவர் கணக்கில்லா நன்மைகள் கொடுக்கப்பட்டவராக நிச்சயமாக ஆகிவிடுகிறார். எனினும் நல்லறிவுடையோர் தவிர வேறு யாரும் இதைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை" (2:269) போன்ற பல்வேறு வசனங்களில் மனிதனின் அன்றாட செயற்பாடுகளில் போதிய அறிவைப் பெற்றிருப்பதன் அவசியம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பான போதிய அறிவைப் பெற்றிருத்தல் மிக முக்கியமானவையாகும்.

### 2. தீர்ப்பளிப்பதில் நீதி

பொதுவாக மோதல் தீர்வுச் செயற்பாட்டில் ஈடுபடும் நபர் தனது முடிவுகளிலும் தீர்ப்புக்களிலும் நீதத்தைப் பேணுவது மிக இன்றிமையாததாகும். இதனையே 'விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுகிறவர்களாக, உண்மையின் மீது நிலைத்தவராக ஆகிவிடுங்கள். எந்த சமூகத்தவரின் விரோதமும் நீங்கள் நீதமாக தீர்ப்பளிப்பதில் நீங்கள் நீதமாக நடந்து கொள்ளாதிருக்க உங்களை திண்ணமாக தூண்டிவிடவேண்டாம். நீங்கள் நீதி செலுத்துங்கள். அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமாகும்" (5:8) எனும் வசனம் இதனை நன்கு பிரதிபலிக்கின்றது. இவ்வசனத்தில் தனிநபர் அல்லது ஒரு சமூகத்தவர் மேலுள்ள தனிப்பட்ட பகைமை அந்நபர் அல்லது அச்சமூகம் தொடர்பில் அநீதமாக நடப்பதற்குத் தூண்டுகோலாக அமைவது மிகவும் கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது மோதல் தீர்வில் நீதம் பேணுவதன் அவசியத்தைப் புலப்படுத்துகின்றது.

### 3. உண்மைத்தன்மை

மோதலின் போது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் உண்மைத்தன்மையுடன் நடந்து கொள்வது மிக முக்கியமானதாகும். "நம்பிக்கை கொண்டோரே! உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள்" (9:119) எனும் வசனம் இக்கருத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

*அத்துடன் 'உனக்கு சந்தேகம் அளிப்பதை விட்டு விடு. சந்தேகம் அளிக்காதவற்றின் பக்கம் சென்றுவிடு. ஏனெனில் உண்மை மன நிறைவைத் தரக்கூடியதாகும். பொய் தடுமாற்றத்தைத் தரக்கூடியதாகும்" (திர்மிதி, 2518) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளமையினூடாகவும் இக்கருத்தை உணர முடியும்.*

#### *4. நம்பகத்தன்மை*

*இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கிணங்க மோதல் தீர்வுச் செயற்பாட்டில் நம்பகத் தன்மையும் மிக முக்கிய விடயமாகும். 'நீங்கள் எல்லோரும் மேய்ப்பாளர்கள் (பொறுப்பாளர்கள்). உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படுவீர்கள்" (புகாரி, 2409) எனும் நபிமொழி ஊடாக மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களில் நம்பகத்தன்மையின் முக்கியத்துவம் தெளிவாகிறது.*

### iii. *தீர்வுகளை வேண்டுதல் (Request solutions)*

*ஒவ்வொரு தரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களைப் பெற்ற பிறகு அடுத்த கட்டமாக முரண்பாட்டு அல்லது மோதல் தன்மையை எவ்வாறு மாற்றலாம் அல்லது குறைக்கலாம் என்பதனை அடையாளம் காண வேண்டும். இதனையே இச்செயன்முறை விளக்குகின்றது. இக்கட்டத்தில் மத்தியஸ்தரின் பணி மிக முக்கியமானதாகும். அதாவது மீண்டும் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடையே விடயங்களை கேள்விகளினூடாக கேட்டறிந்து கொண்டு அவ்வாறான விடயங்களின் ஊடாக எவ்வாறு மோதல் நடத்தையை மாற்றியமைக்க முடியும் என உறுதிகொண்டு மத்தியஸ்தர் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.*

*அந்தவகையில் மத்தியஸ்தர் எதனையும் சரியாக விளங்கிக் கொள்ளாது அது பற்றி முடிவு செய்து விட முடியாது. மாறாக அவர் ஒவ்வொரு செயலையும் கேட்டறிபவராகவும் குறிப்பிட்ட தரப்பார்களின் வாய்மொழி நுணுக்கத்தையும் அறிந்தவராகவும் உடல் மொழியை நன்கு புரிந்து கொள்ளக் கூடியவாராகவும் இருக்க வேண்டும். மேலும் மோதல் வன்முறையாக மாறுவதை நிறுத்துவதற்கு முற்று முழுதாக ஒத்துழைக்க வேண்டும். அதாவது பிரச்சினையை கணப் பொழுதில் அவ்விடத்திலேயே விலக்கி, மோதலைத் தீர்ப்பதற்கான வழிகளை நோக்கிச் செல்ல வேண்டும். இதனையே மோதல் தீர்வு செயன்முறையின் மூன்றாம் செயன்முறைக் கட்டமாக AMA பரிந்துரை செய்கிறது.*

*இஸ்லாத்தில் இதனை நோக்கும் போது மத்தியஸ்தர், மோதல் ஒன்று உருவாகுவதற்கான தன்மையை ஆராய்ந்த பிறகு அவருடைய ஆற்றலைப் பயன்படுத்தி, இரு தரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களை சரியாக விளங்கி, அவ்விடத்திலேயே அப்பிரச்சினைக்குரிய தீர்வினை நோக்கி விரைவுபடுத்துவது விரும்பத்தக்கது.*

*இதனைப் பற்றி அல்குர்ஆன் விசுவாசிகளிலுள்ள இரு கூட்டத்தார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால் அவ்விருவருக்கிடையில் சமாதானம் செய்யுங்கள்" (49:9) எனக் கூறுகிறது.*

*உண்மையில், முரண்பாடு ஒன்று ஏற்பட்டுவிட்ட பின்னர் அதற்கான தீர்வினைக் குறித்த தரப்பினரிடையேயே தீர்வினைக் கோர விட்டுவிடல் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அல்குர்ஆனிய வசனங்களையும், ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் குறிப்பிட முடியும்.*

*ஒரு முறை சில பொருட்கள் நபி (ஸல்) அவர்களால் முஹாஜிரீன்களிடையே மாத்திரம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்ற விடயத்தில் ஏனைய முஸ்லிம்களான அன்சாரிகளிடையே ஒரு சலசலப்பு எழுந்தது. குறித்த இந்த விடயம் நபியவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கு நபியவர்கள், முஹாஜிரீன்கள் பொருட்களை எடுத்துக் கொண்டனர். நீங்கள் இறைதூதரை கொண்டு செல்ல*

விரும்பவில்லையா எனக் கேட்டார்கள். இதனைப் பொருந்திக்கொண்ட அன்சாரிகள் நாங்கள் அல்லாஹ்வின் தூதரை பொருந்திக் கொண்டோம் என ஏற்றுக்கொண்டனர் (அஹ்மத், 11730).

குறித்த இந்நிகழ்வானது மோதல் ஒன்று ஏற்படும் சூழ்நிலையை சுமுகமாக்கும் முறையிலும் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் மோதல் தீர்வானது அவர்களுக்கு மத்தியிலே விடப்பட்டுள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றது. இங்கு அன்சாரிகளே தீர்வினைப் பெற்று பொருந்திக்கொண்டனர். இதுவே சிறந்த ஒரு மத்தியஸ்தத்துக்கான உதாரணமாக எடுத்துக் காட்ட முடியும்.

ஹுதைபியா உடன்படிக்கையானது மதீனாவில் இருந்து மக்காவிற்கு முஸ்லிம்கள் ஹிஜ்ரி 6இல் உம்ரா பயணத்திற்காக புறப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் மக்காவிலே சூழ்நிலைகள் கடினமானதாக மாறியிருந்த வேளை இடம்பெற்றது. அங்கு யுத்தம் ஒன்று ஏற்படவிருக்கும் சூழலில் நபியவர்கள் இந்நிலையை நுணுக்கமாகக் கையாளும் வகையில் அறிவார்ந்த முறையில் நகர்வுகளை மேற்கொண்டமையை அவதானிக்க முடியும். இந்த சந்தர்ப்பத்திலே ஹுதைபியா உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போதும் உடன்படிக்கையின் பல நிபந்தனைகள் வெளிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரானதாகவும் அநீதியானதாகவும் இருந்தபோதிலும் கூட நபியவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள் (Al-Mubarakpuri, 2002).

### iv. முரண்பாட்டுத் தரப்பினர் இருவரும் ஆதரிக்கும் வகையிலான தீர்வுகளை இனங்காணல் *(Identify solutions both disputants can support)*

மோதல் ஒன்று உருவாகி, இரு சாராரினாலும் மத்தியஸ்தர் முன்னிலையில் அவ்விடயம் குறித்து தெளிவாகப் பேசப்பட்டதன் பின்னர் அவ்விருவரது கருத்துக்களுக்கும் இணங்க தீர்க்கமான முறையில் ஒரு முடிவிற்கு வருவதனை இந்தப் படிமுறை சுட்டிக்காட்டுகின்றது. ஏற்பட்டுள்ள மோதலானது தனி நபர்களுக்கிடையில் இருப்பினும் குழுக்கள், நிறுவனங்கள் என்பவற்றிற்கு இடையிலாக இருப்பினும் அதனைச் சார்ந்துள்ள ஏனைய சமூகத்தாருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் அனைவரது நலன்களையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படல் சிறந்ததாகும். தனிப்பட்ட இலாபங்களை இங்கு நோக்கமாகக் கொண்டிராது பொதுநலன் கருத்தில் கொள்ளப்படவும் வேண்டும். எனவே, இங்கு பெறப்படும் தீர்வானது பக்கசார்பற்ற முறையில் இரு தரப்பில் இருந்தும் உடன்பாட்டிற்கு வரும் வகையிலும் தம்மை சார்ந்தோருக்கு நல்ல பல விளைவுகளைக் கொண்டதாகவும் இருப்பது அவசியமாகும். இதனையே இச்செயன்முறையில் இறுதித் தீர்மானம் அனைவருக்கும் நலனாக இருப்பதுடன் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைவாக அதனை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும் என AMA பரிந்துரைக்கிறது.

இஸ்லாத்தைப் பொறுத்தமட்டில் முரண்பாடொன்றைத் தீர்ப்பதில் இவ்வாறான படிமுறை அதிகம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமையை பல்வேறு சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஹஜ்ஜதுல் வதாவிலே (இறுதி ஹஜ்) நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கிய உபதேசத்தில் 'எல்லா மனிதர்களும் ஆதம் மற்றும் ஹவ்வாவில் இருந்தே வந்தவர்களாவர். அரபிகள் அஜமிகளை (அரபி அல்லாதோரை) விட சிறந்தவர்களல்லர். அஜமிகள் அரபிகளை விடவும் சிறந்தவர்களும் அல்லர். வெள்ளை நிறத்தவர்கள் கறுப்பர்களை விட சிறந்தவர்களும் அல்லர். மேலும் கறுப்பர்கள் வெள்ளையர்களை விடவும் சிறந்தவர்களுமல்லர்" (அஹ்மத், 23489) எனக் குறிப்பிட்டார்கள்.

இந்நபிமொழி மனிதர்களுக்கிடையே எவ்வித பாகுபாடுகளோ ஏற்றத்தாழ்வுகளோ இன்றி பக்கச்சார்பற்ற முறையில் தீர்வுகளும் முடிவுகளும் பெறப்பட வேண்டும் எனும் கருத்தை உணர்த்துகிறது.

அத்துடன் மனிதர்கள் யாவரும் அல்லாஹ்வுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவர்கள் என்பதனை முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்கின்றனர். மேலும் தீர்ப்பு நாளிலே அவர்களது வெற்றி இவ்வுலக வாழ்வில் அவர்களது செயல்பாடுகளைக் கொண்டே தீர்மானிக்கப்பட இருக்கின்றது. இந்த விடயமானது உலக வாழ்வில் மனிதனது எண்ணம் மற்றும் நடத்தையில் தாக்கம் செலுத்தக்கூடியதாகும்.

அதேபோன்று இறைவன் மனிதனைப் பூமியில் அவனது பிரதிநிதியாகப் படைத்துள்ளான். இஸ்லாத்திலே வன்முறையின் உச்ச கட்டமான போர் நிகழ்ந்திருக்கும் நிலையிலும் கூட பூமியின் பாதுகாப்பு வேண்டப்பட்டு நிற்கிறது (Yassien & Yassien, 2015).

'முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு பின்னர் இஸ்லாமிய சமூகத்தின் முதல் தலைவர் என்ற வகையில் அபூ பக்கர் (ரழி) அவர்கள் போருக்கு சிலரை அனுப்பி வைத்த போது, தனது படையினருக்கு, பகுத்தறியாது யாரையும் கொள்ள வேண்டாம். மரங்கள், தாவரங்கள் மிருகங்களை வெட்டிவிட வேண்டாம். அது யுத்த களமாக இருந்தாலும் சரியே என எச்சரித்தார்கள்" (Rila, 1950).

இது, நிலைமைகள் எவ்வளவு மோசமாக இருப்பினும் அங்கு நீதம் நிலைத்திருக்க வேண்டும். முடிவில் எவருக்கும் எந்த உயிருக்கும் அநீதம் இழைக்கப்படக் கூடாது என்பதில் கவனமாக இருந்துள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

மேலும் 'நான் உங்களுக்கு தொழுகை, நோன்பு, தர்மம் என்பவற்றை விட சிறந்த செயலை சொல்லிதரட்டுமா எனக் கேட்டார்கள்? இருவருக்கிடையில் சமாதானம் செய்து வையுங்கள். பகைமை மற்றும் கெடுதிகள் சுவனத்தின் வெகுமதிகளை அதன் வேர்களால் கிளித்துவிடுகின்றன" (திர்மிதி, 2509) எனும் நபிமொழியும் இக்கருத்தை வலுவூட்டுகிறது.

மோதல் தீர்வொன்றில் ஈடுபடக்கூடியவர் நன்நடத்தை கொண்டவராக இருப்பதன் மூலமே அவரால் மக்கள் மத்தியில் அமைதியை நிலைக்கச் செய்ய முடியும். இதற்கு சிறந்த உதாரணமாக நபி (ஸல்) அவர்கள் காணப்படுகின்றார்கள்.

அத்துடன் மோதல் தீர்வில் இரு தரப்பினரும் ஆதரிக்கும் வகையிலான தீர்வுகளைப் பெறுவதில் மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், பெருந்தன்மை, பொது மன்னிப்பு, கடந்த காலத்தை மறத்தல் என்பன இல்லாமல் மோதலைக் குறைக்க முடியாது என இஸ்லாம் கூறுகிறது (Babagana & Tukur, 2020).

அத்துடன் "இன்னும் தீமைக்குக் கூலி அதைப் போன்ற தீமையேயாகும்;. ஆனால், எவர் (அதனை) மன்னித்துச் சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது" (42:40) எனும் அல்குர்ஆனிய வசனத்தினூடாக இஸ்லாத்தில் கோபம், பழிவாங்குதல் போன்றன அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அமைதி, நடுநிலை வகித்தல், மத்தியஸ்தம் செய்தல், நீதி செலுத்தல் என்பவற்றையே நல்லிணக்கத்தின் அடிப்படைகளாக உபதேசித்துள்ளது (Babagana & Tukur, 2020). இவ்வாறாக மன்னிப்பு என்பது மோதலுக்கான தீர்வினை நாடும் போது இரு தரப்பினரும் புரிய வேண்டிய முக்கிய அம்சமாகும் எனக் கொள்ள முடியும்.

### v. இரு தரப்பினருக்கிடையிலான உடன்பாடு (Agreement)

இப்படிநிலையில் கைகுலுக்கல் செயற்பாட்டை AMA பிரதானமாகப் பரிந்துரைக்கிறது. கைகுலுக்குதல் சமூகத்துடன் இணைந்த ஒரு சம்பிரதாயமாக பார்க்கப்படுவதனால் அது நடத்தைகளுக்கு அப்பாற்பட்ட அர்த்தத்துடன் ஊக்கமளிக்கின்றன (Schroeder et al., 2019). இது போட்டிக்குப் பதிலாக இரு தரப்பினருக்கும் மத்தியில் ஒன்றிணைக்கும் முகமாக ஒத்துழைப்புடன் செயற்படும் நோக்கத்திற்கான ஒரு சமிஞ்சையாகத் தொழிற்படுகின்றது (Schelling, 1980). இதன் விளைவாக ஒருவன் இன்னொருவனுடன் ஒத்துழைப்புடன் நடந்து கொள்ளத் தூண்டலாம். கை

குலுக்குதலை அறிந்து கொள்வது அந்த நபரின் கூட்டுறவு நோக்கம், செயற்பாடு போன்ற உணர்வை அதிகரிக்கக் காரணமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் *முஸாபஹா* (கை குலுக்குதல்) வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. இதற்கு "நபி (ஸல்) அவர்களின் காலத்தில் *முஸாபஹா* செய்யும் வழக்கம் இருந்ததா? என்று அனஸ் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள் ஆம் என்றார்" (புகாரி, 6263) எனும் நபிமொழி சான்றாகும்.

அதேபோன்று கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களும் மற்றும் இருவரும் தபூக் போரில் பங்கெடுக்காத காரணத்தால் சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்டு இருந்தார்கள். சில நாட்கள் நீடித்த இந்தப் புறக்கணிப்பின் பின்னர் இறைவன் அம்மூவரையும் மன்னித்து விட்டதாக 9:118 வசனத்தை அருளினான். அதை மக்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அது பற்றி பின்வரும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. கஅப் கூறுகிறார். இந்த செய்தியைக் கேட்டவுடன் நான் பள்ளிவாசலுக்குச் சென்றேன். அங்கே மக்கள் சூழ நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்து இருந்தார்கள். என்னைக் கண்டதும் தல்ஹா (ரலி) அவர்கள் என்னை நோக்கி வந்து எனக்கு வாழ்த்துக் கூறி *முஸாபஹா* செய்தார் (புகாரி, 4418) எனும் நபிமொழியும் இக்கருத்தை மேலும் வலுவூட்டுகிறது. இச்சம்பவத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் ஒரு நபித்தோழர் மற்றொரு நபித்தோழருக்கு *முஸாபஹா* செய்துள்ளதால் இந்த வழக்கம் நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் இருந்துள்ளது என்பதை அறியலாம்.

அத்துடன் இதற்கு மேலதிகமாக இஸ்லாம் பரிந்துரைக்கும் *முஆனகா* (கட்டித்தழுவுதல்) *ஸலாம்* சொல்லல் போன்ற செயற்பாடுகள் மூலமும் நேரடியாகவே அன்பு பரிமாறப்படுவதனைக் காணலாம்.

நீண்ட இடைவெளிக்குப் பின் ஹபஷா நாட்டில் இருந்து வருகை தந்த ஜ/பர் (ரழி அவர்களின் வருகையால் மகிழ்ச்சியுற்ற நபி (ஸல்) அவர்கள் அவரைக் கட்டித் தழுவியமை (அபூ தாவூத், 5220) இதற்கான சிறந்த சான்றாகும்.

அதேபோல் இக்கருத்தை "என் உயிரைத் தன்கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! நீங்கள் ஈமான் கொள்ளும்வரை நீங்கள் சுவர்க்கத்தில் நுழைய மாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம், அன்பு கொள்ளும்வரை ஈமான் கொண்டவராக மாட்டீர்கள். உங்களிடையே பரஸ்பர அன்பு ஏற்பட நான் ஒரு விடயத்தைக் கூறட்டுமா? உங்களுக்கிடையே ஸலாத்தை பரப்பிக்கொள்ளுங்கள்" (முஸ்லிம், 54) எனும் நபிமொழியும் உணர்த்துகிறது.

மோதல் தீர்வில் மற்றுமொரு முக்கிய அம்சமாக உடன்படிக்கைகள் மற்றும் சமாதான ஒப்பந்தங்கள் என்பவற்றைக் கூற முடியும். உலக வரலாற்றிலே உடன்படிக்கைகள் என்பன வன்முறைகளையும் குழப்பங்களையும் தடுப்பதற்கு உபயோகிக்கப்பட்ட மிகச் சிறந்த உத்தியாகவும் கருவியாகவும் காணப்படுகின்றன. 1914-1918 முதலாம் உலக மகா யுத்தம் மற்றும் 1939-1945 இரண்டாம் உலக மகா யுத்தம் என்பவைகள் கூட நல்லிணக்கம், அமைதி, சமாதனம் என்ற கருப்பொருள்களின் அடிப்படையிலான உடன்படிக்கைகள் ஊடாகவே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. எனவே, மோதல் ஒன்றை அமைதியின் பக்கம் கொண்டு செல்வதில் பிரதான பங்கு வகிக்கக்கூடியதாக உடன்படிக்கைகள் காணப்படுகின்றன. அது மாத்திரமன்றி உடன்படிக்கைகள் என்பன யுத்த நிறுத்தத்திற்கு மட்டும் இல்லாமல் யுத்தங்கள், பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவும் வழி செய்கின்றன. எனவே, உடன்படிக்கைகள் ஊடாக மோதல்களைக் களையலாம் அல்லது குறைக்கலாம்.

உடன்படிக்கைக்கு அடிப்படை அம்சமாக கலந்துரையாடல் காணப்படுகின்றது. இஸ்லாம் இதற்கு சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளது. கலந்துரையாடல் என்பது உண்மையின் அடிப்படையில் அமைய வேண்டும். பொய், புரளி, பழிசுமத்தல், அபாண்டம் என்பவற்றை

*அடிப்படையாக கொண்டு கலந்துரையாடல் அமைகின்ற பொழுது நிச்சயமாக நல்ல விளைவுகளை அது கொடுக்காது.*

*அந்தவகையில் பெரும் கொடுங்கோல் ஆட்சியாளனான பிர்அவ்னுடன் கலந்துரையாடுவதற்காக மூஸா (அலை) அவர்களும் அவரின் சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களும் சென்ற போது இறைவன் அவர்களிடம் அவனிடத்தில் நளினமான வார்த்தையினூடாக கலந்துரையாடுமாறு வழிகாட்டுகிறான் (அல்குர்ஆன், 20:44). அச்செயற்பாடே சிந்திப்பதற்கும் இறையச்சம் ஏற்படுவதற்கும் தூண்டுகோலாக அமைய வல்லதாகும்.*

*அதேபோல் "நபியே! நீங்கள் (மனிதர்களை) நளினமாகவும் அழகான நல்லுபதேசத்தை கொண்டுமே உங்கள் இறைவனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றி அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால்) நீங்கள் (கண்ணியமான) அழகான முறையில் தர்க்கம் செய்யுங்கள்" (16:125) எனும் அல்குர்ஆனிய வழிகாட்டலும் இக்கருத்தையே உணர்த்துகிறது.*

*எவ்வகையான முரண்பாடுகளாகவோ சச்சரவுகளாகவோ இருப்பினும் அவற்றைத் தீர்க்க ஆரோக்கியமான கலந்துரையாடல் வழிவகுக்கின்றது. இஸ்லாமிய வரலாற்றில் பேச்சு வார்த்தைகள் மூலமும் உடன்படிக்கைகள் மூலமும் பல குழப்பங்களும் யுத்தங்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமைக்கான பல்வேறு சான்றுகள் உள்ளன.*

*நபி (ஸல்) மதீனாவில் அரசியல் அமைப்பு, சட்ட ஒழுங்கு ஆகிய அனைத்திலும் முதன் முதலாக முஸ்லிம்களுக்கு மத்தியில் நிலைத் தன்மையையும் ஒருமைப்பாட்டையும் நிறுவினார்கள். அதன் மூலம் மதீனாவில் புதிய இஸ்லாமிய சமுதாயத்திற்கும் சமூகத்திற்குமான அடித்தளத்தை மிக ஆழமாக உறுதிப்படுத்தினார்கள்.*

*இரண்டாம் கட்டமாக, முஸ்லிம் அல்லாதவர்களுடன் தங்களது சமூகத் தொடர்புகளை முறைப்படுத்த துவங்கினார்கள். முழு மனித சமுதாயமும் நிம்மதி, பாதுகாப்பு, நற்பயன்கள், நல்லுறவுகள் உருவாகி பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் நாட்டு மக்களை கொண்டு வர வேண்டும் என்பதற்காக மதீனா சாசனத்தை அறிமுகப்படுத்தினார்கள். ஆகவே, சுய நோக்கங்களும் இனவெறியும் நிரம்பி இருந்த அக்காலத்தில் எங்கும் காணப்படாத மன்னித்தல், பெருந்தன்மையுடன் நடத்தல், விட்டுக்கொடுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களை நபி (ஸல்) அவர்கள் அமைத்தார்கள்.*

*மதீனாவில் இருந்த யூதர்கள் முஸ்லிம்களின் மீது பகைமை உணர்வு கொண்டிருந்த போதிலும் அதனை வெளிப்படுத்தாமல் நயவஞ்சகம் கொண்டிருந்தனர். எனினும் நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் நல்ல உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு அவர்களது செல்வத்திலும் மதத்திலும் முழு சுதந்திரம் அளித்தார்கள்.*

*முஸ்லிம்கள் மீது யூதர்கள் வஞ்சகம் கொண்டிருக்கும் நிலையில் அங்கு குழப்பங்கள் ஏற்பட்டு விடாமலும், அதேவேளை மதீனா வாசிகளுக்குள் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தினர்களிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் என்பவற்றை சுமுகமாக்கும் முறையிலும், தடுக்கும் வகையிலும் அனைவருக்கும் சமநீதி, சுதந்திரம் என்பவற்றைக் கோட்பாடுகளாகக் கொண்டு அச்சாசனத்தை நிறுவினார்கள். இஸ்லாமிய பூமியாக மதீனா பிரகடனப்படுத்தப்பட்ட நிலையிலும், அங்கு வாழும் ஏனைய மக்களுக்கும் மாற்று மதத்தவர்களுக்கும் அவர்கள் வாழ்வதற்கும் சுதந்திரமாக இருப்பதற்குமான வகையில் மதீனா சாசனம் அமைந்திருந்தது.*

**முடிவுரை**

மோதல் முகாமைத்துவச் செயன்முறை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களை விளக்குவதைப் பிரதான இலக்காகக் கொண்டுள்ள இவ்வாய்வு இஸ்லாமிய மூல ஆவணங்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் ஊடாக அதனை நிறுவ முயல்கிறது. முரண்பாடுகள் மனித வாழ்வில் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும் அவை தோன்றும் போது முறையாக கையாண்டு அவற்றைத் தீர்ப்பது மிக அவசியமானதாகும். அந்தவகையில் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கான சீரிய வழிகாட்டல்களை வழங்கும் இஸ்லாம் முரண்பாடுகள் தோன்றும் போது அவற்றை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கான பல்வேறு கோட்பாடு மற்றும் நடைமுறைசார் வழிகாட்டல்களைக் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இவ்வாய்வு முரண்பாட்டு முகாமைத்துவச் செயன்முறை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களின் கோட்பாட்டு அம்சங்களையே விபரிக்கிறது. தனிநபர், குடும்பம், திருமணம் போன்றவற்றில் தொடங்கி சமூகங்கள், உள்நாடு, சர்வதேசம் வரை பல்வேறு பரிணாமங்களில் தோன்றும் முரண்பாடுகள் இஸ்லாமிய வழிகாட்டல்களின் பிரயோகத்தினூடாக நடைமுறைசார்ந்து நோக்கப்படுவது அவற்றின் பெறுமானத்தை மேலும் வலுப்படுத்தவல்லதாகும்.

## References


Al-Mubarakpuri, S. (2002). *Al-Raheeq al-Makhtum* [The sealed nectar: Biography of the noble Prophet]. Dar-us-Salam Publications.

AMA. (2019, July 25). The Five Steps to Conflict Resolution. American Management Association. https://www.amanet.org/articles/the-five-steps-to-conflict-resolution/

Babagana, M., & Tukur, B. (2020). Peace and Conflict Resolution in Islam an Instrument for Sustainable Peaceful Coexistence in Nigeria. *International Journal of Research and Innovation in Social Science, IV*(IX), 454-458.

Cader, A.A. (2017). Islamic principles of conflict management: A model for human resource management. *International Journal of Cross Cultural Management*, *17*(3), 345–363. https://doi.org/10.1177/1470595817740912

Johnston, D. (2003). *Faith- Based Diplomacy Trumping Realpolitik*. Oxford University Press.

Khalid, O. (2017, July 13). *6 Leadership lessons from Prophet (PBUH)*. IslamicFinder. https://www.islamicfinder.org/

Madalina, O. (2016). Conflict Management, a New Challenge. *Procedia Economics and Finance, 39*, 807-814. https://doi.org/10.1016/S2212-5671(16)30255-6

Rila, M. (1950). *'Abu Bakr al-Sidiyq 'awal al-khulafa' al-raashidin*. Dar 'Ihya' al-Kutub al-Arabia.

Rizvi, M.T.M. (2018). Muraṇpāṭukaḷai kaiyāḷutal: Muham'matu Nabi (sal) avarkaḷiṉ sīrāvai aṭippaṭaiyākak koṇṭatōr āyvu. *Full paper proceedings of 5th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka* (pp. 295-301). http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3422

Schelling, T.C. (1980). *The Strategy of Conflict*. Cambridge: Harvard University press.

Schroeder, J., Risen, J.L., Gino, F., & Norton, M.I. (2019). Handshaking Promotes Deal-Making by Signaling Cooperative *Intent. Journal of Personality and Social Psychology*, *116*(5), 743–768. http://dx.doi.org/10.1037/pspi0000157

Vehapi, F. (2013). *Conflict Resolution in Islam: Document Review of the Early Sources* [Master's thesis, Portland State University]. PDXScholar. https://doi.org/10.15760/etd.1445

Yassien, M.N., & Yassien, E. (2015). Conflict Resolution from an Islamic Perspective from Conflict Resolution to Diversity Management. *Journal Sharia and Law, 2015*(62), 61-81. http://dx.doi.org/10.12816/0025810